1974 மார்ச் 30]

Vilathurai Lift Irrigation Scheme

*695 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to dismantle and remove the machines installed for Vilathurai Lift Irrigation Scheme ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். மு.ப. 9-30

திரு. என். டென்னிஸ் : இதை மாற்றுமல் அங்கே இயங்க வைத்தால் வரட்சிக் காலங்களில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும். இன்னும் குடி தண்ணீர் திட்டத்திற்கான ஒரு திட்டமும் முன்பு வைக்கப்பட்டிருக்கிறது. குடி தண்ணீர் திட்டத்திற்கும் வரட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு உபயோகமாக இருப்பதற்கும் இந்த இயந்திரங்களை அங்கே மாற்றுமல் இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆயக்கட்டிலிருந்த பூமிகள் சிற்றுறு—பட்டணங்கால் திட்டத்தின்கீழ் பயன்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்களை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றுவதற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

Bridge across Kushastali

*696 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a bridge across the river " Kushastali" on Tiruthani-Nagalapuram Road ; and

(*b*) if so, when the work will be taken up ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : இந்தப் பாலவேலையை எடுத்துக் கொள்வது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்ற பட்ஜெட் கூட்டம் முடிந்தபிறகு இந்த வேலைக்கான ஒப்புதலை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது ஓர் ஆண்டு காலமாகியும் இதுவரையில் மத்திய அரசு அதற்கான ஒப்புதலைக் கொடுக்க வில்லை. இது மட்டுமல்ல, எந்தத் திட்டத்தை அனுப்பினாலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு ஓராண்டு, இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி, இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை விரைவிலே பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வற்புறுத்த நாம் தவறுவதில்லை. காலதாமதம் ஆவதைத் தவிர்க்க முடியவில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : இந்த குசஸ்தலை ஆற்றின் மீது பள்ளிப்பட்டு அருகே ஒரு பாலம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது, எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.

Electrical Testing Laboratory, Kakkalur

*697 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Electrical Testing Laboratory set up in the Functional Industrial Estate at Kakkalur near Trivellore has commenced work ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : திருவள்ளூருக்கு அருகிலுள்ள காக்கலூரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புத் தொழிற்பேட்டையிலுள்ள பொது மின் சோதனை ஆய்வுக்கூடம் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் சுமார் 25 பெருந்தொழில், சிறுதொழில்களுக்குப் பயனுள்ள 350 மாதிரிகளை இந்த ஆய்வுக்கூடம் சோதனை செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : எந்தெந்த விதமான ஆய்வுகள் செய்யப்படுகின்றன அந்தத் தொழிற்சாலையில் என்று சொல்ல முடியுமா?

The Hon. Thiru S. MADHAVAN :

(1) Electric Motors including Fractional Horse Power Motors.

(2) Insulation materials including L.T. Insulators.

(3) Lamp and lamp accessories including fluorescent tubes, starters, chokes, etc.

(4) Fans and

(5) Conductors, Cables and Winding wires.

இதுபோன்ற சாமான்களையெல்லாம் அங்கே வைத்திருக்கிறோம். எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியல் எது எது அவர்களுக்கு டெஸ்டு பண்ணுவதற்கு பெரிய இயந்திரங்கள் இல்லாமல் இருக்கிறதோ அதை இந்த லாபரடரி மூலமாக சிறு தொழில் கூடங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.